அசல் வழக்கு எண்.326/2018 வா.சா.1 ஜானகி க/பெ சந்தரமூர்த்தி

**<u>08.08.2023 குறுக்கு விசாரணை</u>**

1. வழக்குச் சொத்து இரும்பேடு கிராமத்தில் உள்ளது. வழக்குச்சொத்து இரண்டு அயிட்ட சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2வது அயிட்டச் சொத்து கண்ணப்ப முதலியாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 2வது அயிட்டச் சொத்து கண்ணப்ப முதலியாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்குச்சொத்திற்கான வில்லங்கம் போட்டு பார்த்து விட்டு அதன் பின்னர் தான் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். அந்த வில்லங்க சான்று வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் வில்லங்கம் போட்டு பார்க்கவிலலை என்றம் வில்லங்க சான்றை இந்த வழக்கில் தாக்கல் செய்யவும் இல்லை என்றும் அவ்வாறு வில்லங்கம் பார்த்திருந்தால் வழக்கு சொத்து உண்மையிலேயே யாருடையது என்ற விவரம் எனக்கு தெரிய வந்திருக்கும் என்றும் அதனால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. என் கணவர் உயிருடன் இருந்தவரையில் பாகம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். என் கணவர் சென்னையில் அரசு வேலை செய்து கொண்டிருந்ததால் அவர் பாகம் கேட்கவில்லை. என் கணவர் இறந்தபிறகு அவர் வேலை செய்த அதே துறையிலேயே கருணை அடிப்படையில் எனக்கு வேலை வழங்கப்பட்டது என்றால் சரிதான். என் கணவர் 1999ல் இறந்தார். நான் பிரிதிவாதிகளிடம் 2018ல் தான் பாகம் கேட்டேன். அதற்கு முன்பு பஞ்சாயத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். பஞ்சாயத்தில் எனக்கு என் கணவரின் வேலையை கொடுத்து விட்டதால் பாகம் கேட்க வேண்டாம் என்று சொன்னார்கள்.

4. என் கணவர் உயிருடன் இருந்தவரையில் கூட்டுக்குடும்பமாக தான் இருந்தோம் என்றால் சரியல்ல. சென்னையில் என் அப்பா வீட்டில் நாங்கள் இருந்தோம். பொங்கல், தீபாவளி போன்ற விசேஷங்களுக்கு இரும்பேடு கிராமத்திற்கு நாங்கள் வந்து செல்வோம். வழக்கு சொத்தானது விவசாய பூமி என்றால் சரிதான். விவசாயத்திற்கு ஆகும் செலவுகள் மற்றும் பொருட்களை பிரதிவாதிகள் தான் பார்த்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என் அப்பா அதை செய்துக் கொடுத்தார். அவ்வாறு என் அப்பா செலவு செய்தார் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. என் கணவர் பெயரில் தாம்பரத்தில் ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான். அதேபோல் கோயம்பேட்டில் என் கணவர் பெயரில் 2 கடைகள் உள்ளது என்றால் அது என் அப்பா பெயரில் உள்ள கடையாகும். என் கணவர் பெயரில் தாம்பரத்தில் உள்ள வீட்டை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அது என் கணவர் லோன் போட்டு பெற்ற வீடாகும். அதனால் அந்த வீட்டை வழக்கில் சேர்க்கவில்லை.

6. வீட்டுக்கடன் பெறுவதற்கு 1வது அயிட்ட சொத்தை தான் பொறுப்பு காட்டி பெறப்பட்டது என்றால் இல்லை. வீட்டு கடன் போக என் அப்பாதான் செலவு செய்தார்.

7. வழக்குச்சொத்து சம்மந்தமாக வா.சாஆ.4 செட்டில்மென்ட் பத்திரம் 2ம் பிரதிவாதிக்கு 1,3,4ம் பிரதிவாதிகள் எழுதி வைத்த பத்திரம் என்றால் சரிதான். அதேபோல் வா.சா.ஆ.5 செட்டில்மென்ட் பத்திரம் 3ம் பிரதிவாதிக்கு 1,3,4ம் பிரதிவாதிகள் எழுதி வத்த பத்திரம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 செட்டில்மென்ட் பத்திரத்தில் வழக்குச்சொத்து எந்த இடத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் தெரியாது. ஆனால் வீட்டு

மனைகளும் நிலமும் எழுதி வைக்கப்பட்டது. வா.சா.ஆ4 மற்றும் வா.சா.ஆ.5 செட்டில்மென்ட் பத்திரம் எழுதும் சமயத்திலேயே எனக்கு சேர வேண்டிய சொத்தினை ஒதுக்கி வைத்துவிட்டு தான் அந்த பத்திரங்கள் எழுதப்பட்டது என்றும், ஆனால் நான் அவரசப்பட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பிரதிவாதிகள் எனக்கு ஒதுக்கி வைத்த சொத்துக்கள் பற்றி எனக்கு தெரியாது.

8.இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகும் 3ம் பிரதிவாதி என் அப்பாவிடம் பேசி எனக்கு என்று ஒதுக்கப்பட்ட சொத்தை நான் எடுத்துக்கொள்ளலாம் என்றும் அந்த சொத்தை எனக்கு கொடுப்பதற்கு பிரதிவாதிகள் எப்போதும் தயாராக தான் உள்ளார்கள் என்றும் சொன்னார் என்றால் அவ்வாறு யாரும் என் அப்பாவிடம் வந்து பேசவில்லை.

9. தற்போதும் பிரதிவாதிகள் எனக்காக ஒதுக்கி வைத்த சொத்தை கொடுக்க தயாராக உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாமல் பத்திர பதிவு செய்துக்கொண்டார்கள். எனக்கு எந்த சொத்தினை ஒதுக்கி வைத்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. என் கணவர் கூட்டுக் குடும்பத்தில் இருந்து வந்ததால் அவரது பெயரில் உள்ள வீட்டினை இந்த வழக்கில் சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

10. 2வது அயிட்டச் சொத்து 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற தனிப்பட்ட சொத்து என்றும் அந்த சொத்தில் நான் பாகம் எதுவும் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அந்த 2ம் அயிட்ட சொத்தை வேறு ஒருவருக்கு கிரயம் கொடுத்து விட்டதால் அந்த சொத்தினை பொறுத்து நான் பாகம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. எனக்கு தெரியாமல் தான் அந்த கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது.

11. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பே பிரதிவாதிகள் பாகம் கொடுக்க தயாராக இருப்பதாக சொல்லி விட்டார்கள் என்றும் ஆனால் நான் வேண்டுமென்றே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.